


# 10 நேர் விகிதசமன்

இப்பாடத்தைக் கற்பதன் மூலம் நீங்கள்

- ✷ நேர் விகித சமன்களை அறிந்து கொள்ளல்
- ✷ நேர் விகித சமன்களைப் பயன்படுத்திக் கணித்தல்களில் ஈடுபடல்
- ✷ அலகு முறையை உபயோகித்து நேர் விகிதசமப் பிரசினங்களைத் தீர்த்தல்
- ✷ வெளிநாட்டு நாணய மாற்றீடுகள் தொடர்பான பிரசினங்களைத் தீர்த்தல்

என்னும் தேர்ச்சிகளை அடைவீர்கள்.

## 10.1 நேர் விகிதசமத்தின் பண்புகள்




குறித்த ஒருவகைச் சலவைத் தூள் பைக்கற்றுகளின் எண்ணிக்கையுடன் அவற்றின் திணிவுகள் மாறும் விதம் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளது.

2 சலவைத் தூள் பைக்கற்றுகளின் திணிவு $= 60$ g
5 சலவைத் தூள் பைக்கற்றுகளின் திணிவு $= 150$ g
சலவைத் தூள் பைக்கற்றுகளின் எண்ணிக்கைகளுக்கிடையிலான விகிதம் $= 2 : 5$
அவற்றுக்கு ஒத்த திணிவுகளுக்கிடையிலான விகிதம் $= 60 : 150$ ஆகும்.
இதனை எளிய வடிவில் காட்டும்போது $= 2 : 5$ ஆகும்.
இதற்கேற்ப,

சலவைத் தூள் பைக்கற்றுகளின் எண்ணிக்கைகளுக்கிடையிலான விகிதம் = திணிவுகளுக்கிடையிலான விகிதம்

இவ்வாறு இரண்டு கணியங்களுக்கிடையிலான விகிதம் அதற்கு ஒத்த வேறு இரண்டு கணியங்களுக்கிடையிலான விகிதத்துக்குச் சமனாவதைக் காட்டும் கணித ரீதியிலான கூற்று **நேர் விகிதசமமாகும்.**

இனி, கீழே விளக்கப்படும் விகிதசமத்தைக் கவனிப்போம்.

| | கடனாகப் பெற்ற தொகை (ரூபாயில்) | 12% ஆண்டு வட்டி (ரூபாயில்) |
|---|---|---|
| A | 1000 | 120 |
| B | 2000 | 240 |
| C | 3000 | 360 |
| D | 4000 | 480 |
| E | 5000 | 600 |

| **A யும் C யும் கடனாகப் பெற்ற தொகை** | **அதற்குச் செலுத்த வேண்டிய வட்டி** |
|---|---|
| A - ரூபா 1000 | ரூபா 120 |
| C - ரூபா 3000 | ரூபா 360 |
| A யும் C யும் கடனாகப் பெற்ற தொகைகளுக்கிடையிலான விகிதம் | A யும் C யும் செலுத்த வேண்டிய வட்டிகளுக் கிடையிலான விகிதம் |
| 1000 : 3000 | 120 : 360 |
| 1 : 3 | 1 : 3 |

மேலே காட்டப்பட்டவாறு இரண்டு கணியங்களுக்குரிய பெறுமானங்களைக் கருதும்போது முதலாம் கணியத்துக்குரிய எவையேனும் இரண்டு பெறுமானங்களுக்கிடையிலான விகிதம் இரண்டாம் கணியத்தின் அதற்கொத்த பெறுமானங்களுக்கிடையிலான விகிதத்துக்குச் சமனாயின் அவ்விரு கணியங்களுக்குமிடையேயான தொடர்பு **நேர் விகிதசமம்** எனப்படும்.

நேர் விகிதசமமாகவுள்ள இரண்டு கணியங்களின் ஒரு கணியம் அதிகரிக்கும்போது மற்றைய கணியமும் அதற்கு ஒத்ததாக அதே விகிதத்தில் அதிகரிக்கும். இவ்வாறே ஒரு கணியம் குறையும்போது அதே விகிதத்தில் மற்றைய கணியமும் குறையும்.

| **பணம்** | **வட்டி** | **மாறிலி** |
|---|---|---|
| ரூபா 1000 | ரூபா 120 | $\frac{120}{1000} = 0.12$ |
| ரூபா 3000 | ரூபா 360 | $\frac{360}{3000} = 0.12$ |

நேர் விகிதசமமான இரண்டு கணியங்களின் விகிதம் ஒருமாறிலியாகும்.

**உதாரணம் 10.1**

வெற்றுக் கட்டங்களை நிரப்புக.

$$2 : 3 = \square : 12$$
$$3 \times 4 = 12$$
$$2 \times 4 = 8$$
$$\therefore 2 : 3 = \boxed{8} : 12$$


இலவச விநியோகத்திற்காக

## பயிற்சி 10.1

1. கீழே தரப்பட்டுள்ள விகிதசமங்களில் வெற்றுக் கட்டத்துக்குப் பொருத்தமான பெறுமானங்களைக் காண்க.

(i) 3 : 4 = 12 : ☐

(ii) 2 : 5 = ☐ : 20

(iii) ☐ : 3 = 16 : 12

(iv) 5 : ☐ = 25 : 20

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காட்டப்படும் இரண்டு கணியங்களும் நேர் விகித சமமா, இல்லையா எனக் குறிப்பிடுக.

(i) புடைவையின் நீளமும் அதன் பெறுமதியும்.
(ii) நாட் சம்பளம் பெறும் ஓர் ஊழியர் வேலை செய்த நாட்களும் செலுத்த வேண்டிய சம்பளமும்.
(iii) ஒரு வட்டத்தின் ஆரையும் சுற்றளவும்.
(iv) ஒரு சதுரத்தின் ஒரு பக்க நீளமும் பரப்பளவும்.
(v) ஒரே வகையிலான நிறப் பென்சில் பெட்டிகளின் எண்ணிக்கையும் அவற்றில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கையும்.
(vi) ஏதேனுமொரு வட்டி வீதத்தில் பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்த எடுக்கும் காலமும் அதற்கெனச் செலுத்த வேண்டிய வட்டியும்
(vii) மோட்டார் வாகனமொன்றின் வேகமும் குறித்தவொரு தூரத்தைச் செல்ல எடுக்கும் நேரமும்.
(viii) யாதாயினுமொரு வேலையில் ஈடுபடும் மனிதரின் எண்ணிக்கையும் அவ்வேலையை நிறைவு செய்ய எடுக்கும் காலமும்.

3. ஒரு வட்டத்தின் ஆரைக்கும் பரப்பளவுக்கும் இடையிலான தொடர்பு கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வட்டத்தின் ஆரை | வட்டத்தின் பரப்பளவு |
|---|---|
| 7 cm | 154 $cm^2$ |
| 14 cm | 616 $cm^2$ |
| 21 cm | 1386 $cm^2$ |
| 28 cm | 2464 $cm^2$ |

இத்தகவல்களை ஆராய்ந்து இக்கணியங்கள் இரண்டிற்குமிடையிலான தொடர்பு நேர் விகிதசமமா இல்லையா என்பதைக் காரணங்களுடன் தருக.

## 10.2 அலகுமுறை

100 g விசுக்கோத்தின் விலை ரூபா 14 ஆகும். இவ்வகையான 350 g விசுக்கோத்தின் விலை என்ன?

மேற்குறித்த பிரசினத்தை இரண்டு மாணவர்கள் தீர்த்த முறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ரமேஸ் | சுரேஸ் |
|---|---|
| 100g விசுக்கோத்து = ரூபா 14 | 100g பிஸ்கட் = ரூபா 14 |
| 300g விசுக்கோத்து = ரூபா $14 \times 3$ | 1g பிஸ்கட் = $\frac{14}{100}$ |
| = ரூபா 42 | |
| 50g விசுக்கோத்து = ரூபா $14 \div 2$ | 350g பிஸ்கட் = $\frac{14}{100} \times 350$ |
| = ரூபா 7 | = ரூபா 49 |
| 350g விசுக்கோத்து = ரூபா $42 + 7$ | |
| = ரூ. 49 | |

இவற்றுள் மிகவும் இலகுவானதும் சுருக்கமானதுமான முறை யாதென நீர் கருதுகிறீர்?

அலகைப் பங்குகளாக்கிக் கொள்வது எப்போதும் இலகுவானதன்று என்பதால் முதலாவது விதம் சிரமமானது இரண்டாவது விதம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்கக்கூடியதாக இருக்கிறது.

அலகுப் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு பிரசினம் தீர்க்கும் முறை அலகுமுறை எனப்படும்.

பல அலகுகளின் பெறுமானம் தெரியுமாயின் ஓர் அலகின் பெறுமானத்தைக் காண்பதன் மூலம் எந்த எண்ணிக்கையிலான அலகுகளினதும் பெறுமானத்தை அலகு முறை மூலம் இலகுவாகக் கணிக்கலாம்.

### உதாரணம் 10.2

மணிக்கு 96 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் ஒரு புகையிரதம் 5 நிமிடங்களில் செல்லும் தூரம் எவ்வளவு?

**(i) அலகு முறை மூலம்**

1 மணித்தியாலத்தில் செல்லும் தூரம் = 96 km

60 நிமிடங்களில் செல்லும் தூரம் = 96 km

1 நிமிடத்தில் செல்லும் தூரம் $= \frac{96}{60}$

5 நிமிடங்களில் செல்லும் தூரம் $= \frac{96}{60} \times 5$

$= 8$ km


இலவச விநியோகத்திற்காக

**(ii) விகிதசம முறையில்**

| காலம் | | தூரம் |
|---|---|---|
| 60 நிமிடம் | | 96 km |
| 5 நிமிடம் | | $x$ |

$$60 : 5 = 96 : x$$

$$\frac{60}{5} = \frac{96}{x}$$

$$60x = 96 \times 5$$

$$x = \frac{96 \times 5}{60}$$

$$x = 8 \text{ km}$$

**உதாரணம் 10.3**

ரூபா 300 இற்கு வாங்கிய ஒரு பொருள் 25% இலாபத்துக்கு விற்கப்பட்டது. விற்ற விலையைக் காண்க.

(i) அலகு முறை மூலம்

ரூபா 100 உடைய பொருள் விற்கப்படும் விலை = ரூபா 125

ரூபா 1 உடைய பொருள் விற்கப்படும் விலை = ரூபா $\frac{125}{100}$

ரூபா 300 உடைய பொருள் விற்கப்படும் விலை = ரூபா $\frac{125}{100} \times 300$

= ரூபா 375

(i) விகிதசம முறையில்

| வாங்கிய விலை | | விற்ற விலை |
|---|---|---|
| 100 | | 125 |
| 300 | | $x$ |

$$100 : 300 = 125 : x$$

$$\frac{100}{300} = \frac{125}{x}$$

$$100x = 300 \times 125$$

$$x = \frac{300}{100} \times 125$$

= ரூபா 375

இதன்படி இதுவரை சதவீதம், வட்டி ஆகிய அலகுகளில் கற்ற பல பிரசினம் விடுவித்தல்களுக்கு அலகு முறை பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்பீர்கள்.

## பயிற்சி 10.2

(அ) பின்வரும் பிரசினங்களை அலகுமுறையில் தீர்க்க.

1. 3 மீற்றர் மேற்சட்டைத் துணியின் விலை ரூபா 675 ஆகும். இவ்வகையிலான 5 மீற்றர் துணியின் விலையைக் காண்க.
2. 4 லீற்றர் பெற்றோலில் 48 கிலோமீற்றர் தூரம் செல்லக்கூடிய ஒரு வாகனம் 10 லீற்றர் பெற்றோலில் செல்லக்கூடிய தூரம் யாது?
3. சீரான வேகத்தில் செல்லும் ஒரு மோட்டார் சைக்கிள் 5 நிமிடங்களில் 1.5 km தூரம் செல்லுமாயின், 12 நிமிடங்களில் அது செல்லும் தூரத்தைக் காண்க.
4. 25 அப்பிள் பழங்களைக் கொண்ட ஒரு பையின் விலை ரூபா 300 ஆகுமாயின் அதிலுள்ள 10 அப்பிள் பழங்களின் விலை எவ்வளவு?
5. ரூபா 500 விலை குறிக்கப்பட்ட ஒரு பொருளுக்குக் கிடைக்கும் கழிவு ரூபா 40 ஆயின், ரூபா 750 விலை குறிக்கப்பட்ட பொருளுக்குக் கிடைக்கும் கழிவு எவ்வளவு?
6. 6 m நீளமுடைய உலோகக் கோலொன்றின் நிறை 1.08 kg ஆகும். இவ்வகையிலான 5 m நீளமுடைய உலோகக் கோலொன்றின் நிறையைக் காண்க.
7. ஒரு விற்பனை நிலையத்தில் குமார் வாங்கிய பொருள்களுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டும் அதே விற்பனை நிலையத்தில் காசிம் வாங்கிய பொருள்களுக்கான பெயர்ப் பட்டியலும் கீழே தரப்பட்டுள்ளன. காசிமின் பற்றுச்சீட்டை நிரப்புக.

**குமாரின் பற்றுச்சீட்டு**

| | |
|---|---|
| அரிசி 4 kg | ரூபா 212 |
| சீனி 2 kg | ரூபா 160 |
| பால்மா 3 பைக்கற்று | ரூபா 795 |
| சவர்க்காரம் 5 | ரூபா 150 |
| 100 g மாஜரின் 2 பைக்கற்று | ரூபா 48 |
| பயிற்சிக் கொப்பிகள் 5 | ரூபா 60 |
| | ரூபா. 1425 |

**காசிமின் பட்டியல்**

| | |
|---|---|
| அரிசி 3 kg | = ------- |
| சீனி 3 kg | = ------- |
| பால்மா 2 பைக்கற்று | = ------- |
| சவர்க்காரம் 3 | = ------- |
| 100 g மாஜரின் 1 பைக்கற்று | = ------- |
| பயிற்சிக் கொப்பிகள் 12 | = ------- |
| | |

8. ஒரு புகையிரதம் 32 km தூரம் செல்ல 24 நிமிடங்கள் எடுக்கும். புகையிரதத்தின் வேகத்தை மணிக்கு எத்தனை கிலோமீற்றர் எனக் காண்க.

9. ஒரு புகையிரதம் ஒரு மணி நேரத்தில் 96 km செல்லும். அது 288 km செல்ல எடுக்கும் நேரத்தைக் காண்க.

10. ஒரு மோட்டார் வாகனம் $1\frac{1}{2}$ மணிநேரத்தில் 120 km செல்லும். அதன் வேகத்தை மணிக்கு எத்தனை கிலோமீற்றர் எனக் காண்க.

11. கொத்தனார் 8 பேருக்கு வழங்கப்பட்ட நாட்கூலி ரூபா 4800 ஆயின், கொத்தனார் 5 பேருக்குரிய நாட்கூலி எவ்வளவு?

12. ரூபா 400 இற்குக் கொள்வனவு செய்த ஒரு பொருள் 12% இலாபத்துக்கு விற்கப்பட்டது. விற்ற விலையைக் காண்க.

13. பொருள் ஒன்றை ரூபா 565 இற்கு விற்பதன் மூலம் 13% இலாபம் கிடைக்கிறது. பொருளின் கொள்விலையைக் காண்க.

14. 12% எளிய வட்டிக்கு 3 ஆண்டுகளில் செலுத்தி முடிப்பதற்காக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட ரூபா 36 000 கடன் பணத்திற்கான மாதக் கட்டணம் ரூபா 1360 ஆயின், அவ்வங்கியிலிருந்து 3 ஆண்டுகளில் செலுத்தி முடிப்பதற்காகப் பெறப்படும் ரூபா 108 000 கடன் தொகைக்கான மாதக் கட்டணம் யாது?

(ஆ) பின்வரும் பிரசினங்களை நேர் விகிதசமத்தை உபயோகித்துத் தீர்க்க.


15. குறித்த ஒரு வகை உலோகத்தின் 16 $cm^3$ இன் நிறை 24 g ஆகும். இவ்வகை உலோகத்தின் 20$cm^3$ இன் நிறையைக் காண்க.

16. அளவிடைக்கேற்ப அமைக்கப்பட்ட ஒரு கப்பலின் பாய்மரத்தின் உயரம் 9 cm உம் உண்மைக் கப்பலின் பாய்மரத்தின் உயரம் 12 m உம் ஆகும். இதற்கேற்ப கப்பலின் உண்மை நீளம் 24 m ஆயின், அளவிடைக்கு வரையப்பட்ட கப்பலின் நீளத்தைக் காண்க.

17. விற்றராசு ஒன்றில் 2.6 cm வில் இழுபட்டுள்ளபோது அதில் தொங்க வைக்கப்பட்டுள்ள நிறை 8 நியுற்றன் ஆகும். இத்தராசில் 3.6 நியுற்றன் நிறை தொங்கவிடப்பட்டுள்ளபோது விற்றராசில் வில் இழுபட்டுள்ள நீளத்தைக் காண்க.


18. குளிர்பானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் ஓர் இயந்திரம் 6 மணித்தியாலத்தில் 840 போத்தல்களை அடைக்கும். இவ்வியந்திரம் 5 மணித்தியாலம் இயங்கியதாயின், அடைக்கப்பட்ட போத்தல்களின் எண்ணிக்கையைக் காண்க.

19. ஒரு கம்பிச் சுருளின் மீது 5 kg திணிவு வைக்கப்படும்போது சுருள் 25 mm சுருங்கும். இச்சுருளின் மீது 12.5 kg நிறை வைக்கப்படும்போது சுருள் சுருங்கும் அளவைக் காண்க.




20. ஒரு தேசப்படத்தில் 3 cm இடைத்தூரத்தினால் காட்டப்படும் இரண்டு நகரங்களுக்கிடையிலான உண்மைத் தூரம் 5 km ஆகும். இத்தேசப்படத்தில் 12 cm இடைத்தூரத்தினால் காட்டப்படும் இரண்டு நகரங்களுக்கிடையிலான உண்மைத் தூரத்தைக் காண்க.

## 10.3 வெளிநாட்டு நாணயங்கள்




மேலே சில வெளிநாடுகளில் உபயோகத்திலுள்ள பண அலகுகள் இலங்கையின் பண அலகுடன் கொண்டுள்ள தொடர்புகள் காட்டப்பட்டுள்ளன. அந்நாடுகளில் அவற்றுக்கே உரித்தான பண அலகுகள் உபயோகத்திலுள்ளன என்பதை நாம் அறிவோம். ஒரு நாட்டின் பண அலகின் பெறுமதி இன்னொரு நாட்டின் பண அலகின் பெறுமதியுடன் கொண்டுள்ள தொடர்பு நாணயமாற்று விகிதம் எனப்படும். ஒரு அமெரிக்க டொலருக்காக இலங்கையில் வழங்கப்படும் ரூபாயின் அளவும் யப்பானில் வழங்கப்படும் யென்னின் அளவும் வித்தியாசமானவையாகும். வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்காகச் செல்வோர் தமது நாட்டின் நாணயத்தை அமெரிக்க டொலர்களில் மாற்றியெடுத்துச் செல்வதோடு தாம் செல்லும் நாட்டில் அவற்றை அந்நாட்டின் நாணயமாக மாற்றிக் கொள்வார்கள். இவ்வாறு மாற்றும்போது பயன்படுத்தும் நாணய மாற்று விகிதத்தை அந்நாடுகள் தீர்மானித்துக் கொள்கின்றன. இலங்கையில் நாணய மாற்றுக்காகப் பயன்படுத்தும் சில மாற்று விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.
(இவை அடிக்கடி மாறும் பெறுமானங்களாகும்)


இலவச விநியோகத்திற்காக

## நாணயமாற்று விகிதங்கள் (குறித்த தினத்தில்)

| வெளிநாட்டு நாணய அலகு | இலங்கை ரூபாயில் பெறுமதி |
|---|---|
| 1 அமெரிக்க டொலர் | ரூபா 113.10 |
| 1 பஹ்ரேன் டினார் | ரூபா 282.10 |
| 1 யூரோ | ரூபா 142.70 |
| 1 யப்பானிய யென் | ரூபா 1.10 |
| 1 ஓமான் றியால் | ரூபா 273.40 |
| 1 பாகிஸ்தான் ரூபாய் | ரூபா 1.40 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | ரூபா 168.75 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | ரூபா 76.25 |

## நாணய மாற்றீடு

### உதாரணம் 10.4

ஓர் அமெரிக்க டொலர் இலங்கை ரூபாவில் 113.10 ஆகவுள்ளபோது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றுள்ள இலங்கையரின் மாதச் சம்பளம் 400 அமெரிக்க டொலர்களாகும். அவரது சம்பளத்தை இலங்கை ரூபாயில் தருக.

1 அமெரிக்க டொலர் = ரூபா 113.10

400 அமெரிக்க டொலர்கள் = ரூபா $113.10 \times 400$

= ரூபா 45 240

> இன்றைய தினத்தின் நாணய மாற்று விகிதங்களை ஒரு தினசரிப் பத்திரிகையிலிருந்து அல்லது வேறு வழியில் பெற்றுக் கொள்க.

### உதாரணம் 10.5

ஓர் அமெரிக்க டொலர் இலங்கை ரூபாவில் 113.10 ஆகவுள்ளபோது வெளிநாடு செல்லவுள்ள ஒரு வீட்டுப் பணிப்பெண் வங்கியில் ரூபா 56 550 ஐ வழங்கி அந்நாணயத்தை அமெரிக்க டொலர்களில் மாற்றித் தருமாறு வேண்டினாள். அவள் பெறும் பணத்தை அமெரிக்க டொலர்களில் தருக.

ரூபா 113.10 = 1 அமெரிக்க டொலர்

ரூபா 56 550 = $\dfrac{56\,550.00}{113.10}$ அமெரிக்க டொலர்கள்

= 500 அமெரிக்க டொலர்கள்

## பயிற்சி 10.3

இப்பயிற்சிக்காக மேலே தரப்பட்ட அட்டவணையிலுள்ள நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்துக.

1. சர்வதேச நிறுவனம் ஒன்று இலங்கையில் ஒரு செயற்றிட்டத்துக்காக 500 யூரோவை அன்பளிப்பாக வழங்குகிறது. இப்பணத்தின் பெறுமதியை இலங்கை ரூபாயில் காண்க.

2. வெளிநாடொன்றில் வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள கண்ணன் தனது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதற்காக 50 000 யென் பணத்தை இலங்கையிலுள்ள தனது தாய்க்கு அனுப்பினான். தாய் அப்பணத்தை இலங்கை ரூபாய்களில் மாற்றி வங்கியில் வைப்புச் செய்தாள் எனின் வைப்பிலிட்ட பணத்தை இலங்கை ரூபாயில் காண்க.

3. வெளிநாடொன்றிலிருந்து நாடு திரும்பிய ஒரு வீட்டுப் பணிப்பெண் தனது வதிவில்லில்லாதோர் சேமிப்புக் கணக்கிலிருந்து 5 000 ஸ்டேர்லிங் பவுண் பணத்தை இலங்கை ரூபாயில் மாற்றிப் பெற்றுக்கொண்டாள். அவளுக்குக் கிடைக்கும் பணத்தை ரூபாய்களில் காண்க.

4. ரூபா 99 890 ஐ வங்கியில் கொடுத்து யூரோக்களில் மாற்றும் ஒருவர் பெறும் தொகையை யூரோக்களில் காண்க.

5. ஓர் அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூபா 113.10 ஆகும். ரூபா 282 750 ஐ ஒரு வங்கியில் வழங்கிய ஒருவர் பெற்றுக்கொள்ளும் தொகையை அமெரிக்க டொலர்களில் காண்க.

6. புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் சபேஷன் தன்னிடமுள்ள ரூபா 381 250 பணத்தை அவுஸ்திரேலிய டொலர்களில் மாற்றுகின்றார். அவர் பெற்ற தொகையை அவுஸ்திரேலிய டொலர்களில் தருக.

7. இலங்கை ரூபா 70 ஐக் கொண்டு வாங்கக்கூடிய பாகிஸ்தான் ரூபாய்களின் தொகையைக் காண்க.

8. பாகிஸ்தானில் 200 பாகிஸ்தான் ரூபாய்களுக்கு வாங்கிய ஒரு சாரியின் பெறுமதியை இலங்கை ரூபாயில் காண்க.